OS: 538/2018

Date: 05.02.2026

பெயர் : அம்சா என்கிற அம்சவேணி **(வா.சா.1) ஆஜர்**, **சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1. நான் என்ன பரிகாரம் கோரிவழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அனுபவத்தில் இருக்கும் சொத்தை பாகப்பிரிவினை செய்துதரச்சொல்லி தாக்கல் செய்திருக்கிறேன். எந்த கிராமம், எந்த சர்வே எண், என்ன விஸ்தீரணத்தில் உள்ள பூமிக்கு பாகப்பிரிவினை கேட்கிறேன் என்றால் ஒண்டிமாமரத்துப்பட்டி கிராமத்தின் சர்வே எண். 245/1–ல் உள்ள 8 ½ ஏக்கர் பூமியை பாகப்பிரிவினை செய்துதரும்படி சொல்லியிருக்கிறேன்.

2. மேற்படி சொத்து என்னுடைய அனுபவத்தில் தான் இருக்கிறது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம். என்னென்ன ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் காட்டு பத்திரத்தையும், வாரிசு சான்றையும் தாக்கல் செய்திருக்கிறேன். தாவா சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டு எனது சுவாதீனத்தில் இருப்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா பெயர் பெத்திரெட்டி.

3. பெத்தி ரெட்டிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 பேர் வாரிசுகள், 3 ஆண் மகன்கள், ஒரு பெண் மகள். அவர்களின் பெயர் சொல்லமுடியுமா என்றால் முடியும் போடிரெட்டி, கிருஷ்ண ரெட்டி, அண்ணாமலை என்கிற ராமசாமி, லட்சுமி என்பதாகும். போடிரெட்டியும், கிருஷ்ணனும் இந்த வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் என்றால் ஆமாம். அண்ணாமலை என்கிற ராமசாமி எனது தகப்பனார் என்றால் ஆமாம். அண்ணாமலை என்கிற

ராமசாமிக்கு எத்தனை மனைவிகள் என்றால் ஒரு மனைவிதான். அவர் பெயர்என்னவென்றால் அக்கம்மா என்கிற அம்மாகண்ணு என்பதாகும்.

4. 1965ம் ஆண்டில் எனது தகப்பனார் 1, 2 பிரதிவாதிகளுக்கும், அவர்களது தாயாரான கங்கம்மாள் என்பவருக்கும் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்திருக்கும் நிலையில் அதனை ஒரு ஆவணமாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் அதில் உள்ளது என் அப்பாவின் கையெழுத்து அல்ல, அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை . அது உண்மையான ஆவணம் என்றாலும், அதை வா.சா.ஆ. 7 ஆவணமாக நான் தாக்கல் செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் கடந்த 35 வருடங்களுக்கு முன்பு பிறந்தேன். தேதி நினைவில்லை. விடுதலை பத்திரம் எனது தகப்பனார் எழுதிகொடுத்த சமயத்தில் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். என் உடன்பிறந்த சகோதரிகளும் மேற்படி பத்திரம் எழுதப்பட்ட காலத்தில் பிறக்கவில்லை என்றால் சரிதான். இந்த பத்திரம் 1965ம் ஆண்டு எழுதி கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் மேற்படி பத்திரத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

6. அந்த பத்திரம் எழுதி கொடுக்கப்பட்ட காலத்தில் நான் பிறக்காத நிலையில் அது எழுதப்பட்ட காலத்தில் அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாத நிலையில் அந்த பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. ஒரு சொத்தின் அனுபவத்தில் ஒரு நபர் இருந்தால் அந்த நபருக்கு அவருடைய உரிமையை நிலைநாட்டுவதற்காக அரசால் பட்டா கொடுக்கப்படும் என்றால் ஆமாம்.

7. தாவா சொத்தின் அனுபவத்தில் நான் இருந்துவருகிறேன் என்பதை காட்ட பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த

காலத்திலும் தாவா சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றாலும், அதனால் தான் எனக்கு தாவா சொத்திற்கு பட்டா கொடுக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக தாவா சொத்தின் அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. 02.01.1965ம் ஆண்டிலேயே என் தகப்பனார் அவருக்கு பாகம் பிரியாத சொத்துக்களை பொறுத்து தகுந்த பிரதி பிரயோஜனம் பெற்றுக்கொண்டு 1,2 பிரதிவாதிகளுக்கும் அவரது தாயாருக்கும் ஒரு விடுதலை பத்திரம் எழுதிகொடுத்து அந்த விடுதலை பத்திரம் மேச்சேரி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.5/65ஆக பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.

9. எனது தந்தையார் எந்த ஊரில் இறந்தார் என்றால் ஒண்மாமரத்துப்பட்டியில் இறந்தார். ஒண்மாமரத்துப்பட்டியில் தான் இறந்தார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இறப்பு சான்றிதழும், வாரிசு சான்றிதழும் வாங்கியிருக்கிறோம். மேற்படி இறப்பு சான்றிதழையும், வாரிசு சான்றிதழையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

10. என் தாயார் பெயர் அம்மாகண்ணு என்கிற அக்கம்மா என்பதாகும். என் அம்மாவும், அப்பாவும் எந்த பிரச்சனையும் இல்லாமல் ஒரே இடத்தில் ஒன்றாகதான் வாழ்ந்து வந்தார்கள் என்றால் ஆமாம். நானும், எனது சகோதரிகளும், என் பெற்றோருடன் ஒரே இடத்தில் ஒரே குடும்பமாகதான் வசித்து வந்தோம் என்றால் ஆமாம். என் பெற்றோருடன் வசித்துவந்த காலத்தில் என் பெற்றோர் வீட்டில் இருந்து தான் பள்ளிக்கு சென்று வந்தேன் என்றால் ஆமாம்.

11. பப்பிரெட்டியூர் என்பது தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிறது என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ. 4 ஆவணத்தில் வீட்டு

முகவரியாக பப்பிரெட்டியூர் என்று தான் காட்டப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். என் பெற்றோர்கள் காடு ஓட்டுவதற்காக அங்கு சென்றதால் அந்த முகவரி இருக்கிறது, சொந்த ஊர், பூர்வீக இடம் ஒண்டிமாமரத்துப்பட்டிதான்.

12. என் தகப்பனார் காடு ஓட்டுவதற்காக தான் தர்மபுரியில் உள்ள பப்பிரெட்டியூருக்கு சென்றார் என்ற விவரத்தை எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் 1965ம் ஆண்டே விடுதலை பத்திரம் எழுதிகொடுத்துவிட்டு தர்மபுரி மாவட்டம் பப்பிரெட்டியூருக்கு சென்று அங்கு நிரந்தரமாக வசித்து வந்தார் என்றால் சரியல்ல.

13. வழக்கு போடும்வரை தாவா சொத்திற்கு வந்து சென்றுகொண்டிருந்தேனா என்றால் ஆமாம். தாவா சொத்தின்பேரில் என்ன ஆவணங்கள், என்ன தேதியில் , யார் யார் பெயரில் மாற்றம் செய்யப்பட்டடுள்ளது என்பது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 2001ம் ஆண்டு இறந்தார். இந்த வழக்கு முதன்முதலாக மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம்.

14. மேட்டூர் நீதிமன்றத்தில் நான் 29.07.2011ம் தேதியன்று தாக்கல் செய்த வழக்கு 149/2011ஆக மேட்டூர் சார்பு நீதிமன்றல் கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. வழக்கு சொத்து சம்பந்தமாக என்னென்ன ஆவணங்கள் ஏற்பட்டிருக்கிறது என்பதை குறித்து தெரிந்து கொண்ட நிலையில் 2001ம் ஆண்டில் இருந்து 2011ம் ஆண்டு வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சாட்சி என்னென்ன ஆவணங்கள் மாற்றப்பட்டது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும்,

தெரிந்த உடன் கடந்த 13 வருடங்களுக்கு முன்பே வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்றும் கூறினார்.

15. வட்டாட்சியர் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்தால் விசாரணை மேற்கொண்ட பின்னர் தான் பட்டா மாறுதல் கொடுப்பார் என்றால் ஆமாம், ஆனால் எங்களிடம் எந்த கையெழுத்தும் வாங்கவில்லை. எனக்கு அதுபற்றி எந்த விவரமும் தெரியவில்லை. போடி ரெட்டி, கிருஷ்ண ரெட்டி ஆகியோர்கள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யக்கூடாது என்று நான் ஆட்சேபனை ஏதாவது செய்தேனா என்றால் இல்லை.

16. தாவா சொத்தில் எந்தகாலத்திலும் நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றாலும், எனக்கு எந்த காலத்திலும் தாவா சொத்தில் உரிமை எதுவும் இல்லை என்றாலும், அதனால் தான் வட்டாட்சியரிடம் பட்டா மாறுதல் செய்வதற்கு ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் சமயத்தில் என் தகப்பார் எழுதி கொடுத் த விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் தான் 1, 2 பிரதிவாதிகளின் பெயரில் பட்டா மாறுதல் உத்தரவு 06.08.1993ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

17. இந்த வழக்கு சொத்தில் நான் கூட்டு உரிமையாளர் என்று சொல்வது தவறு என்றாலும், வழக்கு சொத்தில் நான் கூட்டு உரிமையாளராக சுவாதீனத்தில் இருந்ததாக சொல்வதும் தவறு என்றாலும், எனவே வழக்கு சொத்தில் 1/3 பாகம் எங்களுக்கு கிடைக்கதக்கது என்று நான் சொல்வது தவறு என்றாலும் சரியல்ல. 02.01.1965ஆண்டிலேயே என் தகப்பனார் தனக்கும், அவருக்கு பிற்பாடு வரபோகும் வாரிசுகளுக்கும் எந்த உரிமையும் இல்லை என்று கூறி விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல, அதை இரத்து செய்யதான் வழக்கு போட்டிருக்கிறோம்.

18. நான் உண்மையாகவே கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்திருந்தால்

என் தகப்பனார் காலமான 2001ம் வருடத்தில் இருந்து 2, 3 வருடங்களுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யாமல் என் தகப்பனார் இறந்து 11 வருடங்களுக்கு பின்னிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதால் இது காலவரையறை சட்டத்தால் பாத்திக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.

19. நான் காலவரையறை பிரிவு 27ன் கீழ் இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக எந்த உரிமையும் கோரமுடியாது என்றாலும், நான் சகல உரிமைகளையும் இழந்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. 29.12.2004ம் தேதிக்கு முன்னர் சொத்துக்களில் ஏதாவது வில்லங்கங்கள் ஏற்பட்டுவிட்டால் பெண் வாரிசுகள் அந்த வில்லங்கங்களை நீக்கச்சொல்லி பரிகாரம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு சொத்தை பாகம் பிரித்து கொடுக்கச்சொல்லி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான், ஆனால் பஞ்சாயத்தார் மூலமாக கேட்டேன்.

20. பஞ்சாயத்தார்கள் யார்யார் என்பது குறித்தும், பஞ்சாயத்து எங்கு எந்த தேதியில் நடந்தது என்பது குறித்து எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பஞ்சாயத்து மூலம் பாகம் பிரித்து கொடுக்கச்சொல்லி கேட்கவில்லை என்றாலும், பஞ்சாயத்தும் எந்த இடத்திலும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

21. எனக்கு தெரியாமல் எனது பெயரை வருவாய் துறை ஆவணங்களில் இருந்து நீக்கிவிட்டதாக எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியிருக்கும் நிலையில் என் பெயர் நீக்குவதற்கு முன்பு என் பெயரில் இருந்த பட்டா, சிட்டா ஆகியவைகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் சொத்து விவரத்திற்கு நான் தான் தகவல் சொன்னேனா என்றால் ஆமாம். எந்த ஆவணத்தை பார்த்து

தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னேன் என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் சிட்டா, பட்டா, அடங்கல் வாங்கி பார்த்து விட்டு தாக்கல் செய்தேன். அந்த சிட்டா, பட்டா, அடங்கலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

22. சர்வே எண் 152/1பி, 125/1டி, ஆகியவைகள் எனது குடும்பத்திற்கு பாத்தியப்படாத சொத்துக்கள் என்றாலும், அவைகள் மூன்றாம் நபருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மூன்றாம் நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் பாகம் இருப்பதாக சொல்லி பாகப்பிரிவினை கோரமுடியாது என்றால் சரியல்ல. 1965ம் ஆண்டு என் தகப்பனார், என் பாட்டிக்கும் 1 2, பிரதிவாதிகளுக்கும் விடுதலைபத்திரம் எழுதி கொடுத்த பின்னர் 1,2 பிரதிவாதிகளும், அவர்களின் தாயாரும் தான் கூட்டுசுவாதீனத்தில் இருந்தார்கள் என்றாலும், அதன் அடிப்படையில்தான் முழு விசாரணைக்கு பின்னர் 06.08.1993 தேதியன்று வருவாய் துறையினர் 1, 2பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தாயார் பெயரில் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் சரியல்ல.

23. என் பாட்டி கங்கம்மாள் உயிருடன் இருந்தபோதே அவர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரித்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை 1, 2 பிரதிவாதிகள் தங்களுக்குள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டு அவர்கள் மட்டுமே அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1, 2பிரதிவாதிகள் பெயரில் மட்டும் தான் தாவா சொத்திற்குரிய அனைத்து வருவாய் துறை ஆவணங்களும் இருக்கிறது

என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் மட்டுமே தாவா சொத்துக்களை தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து கொண்டு அவரவர்கள் பெயரில் அரசுக்கு வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

24. தாவா சொத்தில் எந்த காலத்திலும் நான் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றாலும், எனவே நீதிமன்ற கட்டணம் சட்டம் பிரிவு 37(2)ன்படி கட்டணம் செலுத்தியிருப்பது தவறு என்றாலும், நான் நீதிமன்ற கட்டணத்தை 37(1)ன்படி தான் செலுத்தியிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு எந்தவிதமான வழக்குமூலமும் இல்லை என்றால் சரியல்ல, எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.